**முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண்.527/2018 | இ.ம.எண். |
| எஸ்.சி.ஓ.பி.எண். | நி.வே.ம.எண். |

2025ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ந் தேதி வாதி தரப்பு சாட்சியின் **வா.சா.3**-ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின் படி திரு.ஜிதேந்திரா,பலகை எழுத்தர் என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ப. செந்தில்ராஜா | வட்டம் | : | |
| த/பெ. | : | | மாவட்டம் | : | |
| க/பெ. | : | | தொழில் | : | டவுன் சர்வேயர் |
| கிராமம் | : | | வயது | : | |

**வா.சா.3: முதல் விசாரணை**:

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் ஈரோடு மாநகராட்சியின் அலுவலகத்தில் நகர சார் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து ஈரோடு டவுன் புது வார்டு D -பிளாக் 21 டவுன் சர்வே எண்.95 அக்ராஹார வீதியில் அமைந்துள்ளது. மேற்படி விலாசத்தில் ஒரு பழைய வீடு அமைந்துள்ளது. மேற்படி வீட்டை நான் நேரில் சென்று பார்வையிட்டேன். மேற்படி வீடு அக்ரஹார வீதிக்கு வடக்கு கிழமேல் சந்திற்கு தெற்கு, T.S.92 மற்றும் 94ற்கு கிழக்கு, T.S 96ற்கு மேற்கே அமைந்துள்ளது. தாவாசொத்து

காலியிடம் மற்றும் வீட்டுடன் உள்ளது. அதனுடைய மொத்த விஸ்தீரணம் 165 சதுர மீட்டர் ஆகும். அது மேல்புறம் தென்வடல் 27.2 மீட்டர், பின் கிழபுறமாக 2.8 மீ, பின் வடபுறமாக 8.2மீட்டர், பின் மேபுறமாக 1.8மீட்டர், பின் வடபுறமாக 12.2மீட்டர், வடபுறம் கிழமேல் 5.5மீட்டர், கிழபுறம் தென்வடல் 15.5மீட்டர், பின் ஒரு வளைவாக 5.5மீட்டர், பின் மேபுறமாக 1.6மீட்டரும், பின் தென்புறமாக 3.3மீட்டர், பின் மேபுறமாக 2.0மீட்டர், பின் தென்வடலாக 26.2மீட்டர், தென்புறம் கிழமேல் 4.2மீட்டர் அளவில் அமைந்துள்ளது. மேற்படி சங்கதிகள் குறித்து என்னால் கொடுக்கப்பட்டதாக அறிக்கை **வா.சா.ஆ.30** குறியீடு செய்யப்படுகிறது. நகர புல எண்.92 முதல் 96 வரையிலான புல எண்களுக்கு உரிய டவுன் சர்வே பதிவேட்டின் உண்மை நகல் **வா.சா.ஆ.31** குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்குச்சொத்தான பழைய புல எண்.D-21/100 க்கான நகர புல எண்.95 நரசிம்ம ஐயர் மக்கள் சீனிவாசன், ரங்காச்சாரி, ராமானுஜம், செல்லப்பன் மகன் ரங்கராஜன், ராதிகா மற்றும் செல்லப்பன் மனைவி சரோஜா ஆகியோர் பெயரில் உள்ளது. மேற்படி T.S 95ற்கான புல வரைபடம் உண்மை நகல் தாக்கல் செய்கிறேன். அது **வா.சா.ஆ.32** குறியீடு செய்யப்படுகிறது.